**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

“எனக்குத் தொண்டு செய்வோர் என்னைப் பின்பற்றட்டும். நான் இருக்கும் இடத்தில் என் தொண்டரும் இருப்பர். எனக்குத் தொண்டு செய்வோருக்குத் தந்தை மதிப்பளிக்கிறார்” என்றார்.

(யோவான்: 12:26)

எருசலேம் ஆலயத்தில் இயேசு மறை உரை ஆற்றிக்கொண்டிருக்கும்போது சில கிரேக்கர்கள் (புறவினத்தார்) அவரைப் பார்க்கச் செல்வது தற்செயலான ஒரு நிகழ்வு அல்ல. அந்த வேளையில் அவர்களைப் பார்த்து, அதாவது கிரேக்கர்களிடம் நேரடியாக அல்ல; தம்முடைய இறப்பு எவ்வாறு இருக்கப்போகிறது என்பதை முன் குறித்துச் சொல்கிறார். மேலும் அவருக்கு தொண்டு செய்வோர் அவரைப் பின்பற்றுவர்; ஏனென்றால், அவர் இருக்கும் இடத்தில் அவரின் தொண்டரும் இருப்பர் என்று கூறுகிறார். சீடத்துவத்திற்குச் செல்லும் பாதை முழு உள்ளத்தோடு அவரைப் பின்பற்றுவருக்கு எப்போதும் திறந்தே இருக்கும்

நம்மையும் அவரோடுப் பயணிக்க இயேசு எவ்வாறு நம்மையும் தயாரிக்கின்றார்? எபிரேயருக்கு எழுதப்பட்ட கடிதத்தில் புனித பவுல் கூறுகிறார். இயேசு தாம் மனித உருவில் இருந்தபோது, தம்முடைய வேண்டுதல்களையும் மன்றாட்டையும் உரத்தகுரல் எழுப்பி கண்ணீர் சிந்தி மன்றாடினார்(எபிரேயர்: 5: 7-9) இந்த முழுமையான உண்மையை நாம் வெகுஎளிதாக ஒதுக்கித் தள்ளிவிடலாம்; ஆனால் கெத்சமெனி தோட்டத்தில் தாம் பாடுபடபோகும் அந்த தருணங்களை நினைத்து, மனித உருவில் இருந்த அவர், எவ்வளவு வேதனைப்பட்டிருப்பார் என்பதை நம்மால் உணரமுடியும். இருந்தபோதும், தந்தையின் திட்டத்திற்கு முழுவதுமாக தம்மைக் கையளித்து சாவை வெற்றிக்கொண்டார்.

விதைகள் மண்ணில் விழுந்து, மடிந்தால்தான் அதிகப் பலனைத் தரும் என்னும் இந்த உருவகம், இயேசுவின் பாடுகள், மரணம், அடக்கம், மற்றும் உயிர்ப்பு ஆகிவற்றைக் குறிக்கிறது. கோதுமை மணியைப் போல இயேசு மரணத்தால் மண்ணில் விழுந்து, மீண்டும் புதுவாழ்வுக்கு உயிர்த்தெழுகிறார். எரேமியா இறைவாக்கினர் முன் குறித்ததுபோல, அவருடைய இறப்பு புதிய உடன்படிக்கைக்கு அடையாளமாகிறது. நம் பாவங்களைப் போக்கும் இந்தப் புதிய உடன்படிக்கையின் புது ஆட்டுக்குட்டி. இவரே கடவுளுக்கும் மனிதனுக்கு இடையே பிளவுப்பட்டிருந்த உறவை மீண்டும் நிலைநாட்டியவர்.

ஒவ்வொருமுறையும், புனித நற்கருணையில் நாம் பங்குபெறும்போது இந்த உடன்படிக்கையை நாம் உறுதிப்படுத்துகிறோம். இனியும் இதை யாரும் நமக்குப் போதிக்க வேண்டிய அவசியமில்லை. தூயதோர் உள்ளத்தை நம்மில் படைத்து இறைவனில் நாம் நெருக்கமாக இணைந்துள்ளோம். கிறிஸ்துவை அன்பு செய்து அவரின் சீடர்களாக நாம் அவரைப் பின்பற்றுகிறோம் என்றால், நம்மைச் சுற்றியுள்ள ஒவ்வொருவரையும் நாம் அணுகிச்செல்லவேண்டும். மிகச்சிறியோரிலிருந்து மாமனிதர் வரை அனைவரும் ஆண்டவரை அறிந்துகொள்ளவும், நம்முடைய அன்பைப் பகிர்ந்துகொள்ளவும், மதமோ, நிறமோ, எல்லைகளோ எதுவுமே தடையாக இருக்கக்கூடாது இந்த அன்பினால் நாம் கிறிஸ்துவர்கள் என்று உலகம் அறிந்துகொள்ளும்

இயேசு உன்னை அன்பு செய்கிறார். எப்போதும் அன்பு செய்கிறார். எப்போதும் அன்பு செய்வார்.

**இன்றைய வாசகங்கள்:**

எரேமியா: 31: 31-34

திருபாடல்: 51: 3-4, 12-15

எபிரேயர்: 5: 7-9

யோவான்: 12:20-33

INTERNAL CIRCULATION ONLY
BUL 12/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

21 மார்ச் 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

தவக்காலத்தின் 5 ஆம் ஞாயிறு

## எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்:

சமத்துவத்தைத் தொடக்கி வைத்தல்



# மிகச்சிறியோரிலிருந்து மாமனிதர் வரை அனைவரும் ஆண்டவரை அறிந்துகொள்வர்

விபூதி புதன் அன்று தொடங்கிய தவக்காலத்தில் நம் நெற்றியின்மீது பூசப்பட்ட சாம்பல் நம்முடைய வாழ்க்கையின் பலவீனத்தையும், அனைவருக்கும் இறப்பு உறுதி என்பதையும் நினைவூட்டியது. தவக்காலத்தின் 5 ஆம் ஞாயிறில் பயணம் செய்துகொண்டிருக்கும் இவ்வேளையில், திருப்பாடல் ஆசிரியர் கூறுவது நம் காதில் ஒலிக்கின்றது.” கடவுளே! தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்” தூய உள்ளத்தைக் கேட்கும் இந்த மன்றாட்டின் பொருளை இன்னும் ஆழமாக உணரவும், சீடத்துவத்தின் அடுத்த நிலையை அறிந்து கொள்ளவும் யோவான் நற்செய்தியில் இயேசு இதை நமக்கு வெளிப்படுத்துகிறார்.(யோவான் 12)